திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), அவர்களின்
செயல்முறைகள்
முன்னிலை:- திருமதி.வி.சாவித்திரி

செ.மு.ந.க. எண்.9221/ 2018/ பஆ3 நாள் :08.03.2021

பொருள்: பணியமைப்பு – ஊரக வளர்ச்சி அலகு – திருவள்ளூர் மாவட்டம் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை – திருமதி.S.மரிபிரீத்தி, இளநிலை உதவியாளர் – கருணை அடிப்படையில் 06.08.2018 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்யப்பட்டு அரசாணை வரப்பெற்றுள்ளது – பணி வரன்முறை செய்து – உத்தரவிடல்.

படிக்கப்பட்டது: அரசாணை (4ப) எண்.02 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை நாள்.13.01.2021

*************

உத்தரவு:-

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து பணியிடை காலமான திருமதி.N.J. மேரிஜோஸ்பின் என்பவரின் வாரிசுதாரர் திருமதி.S.மரியபிரீத்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக இம்மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் பணி நியமனம் வழங்கப்பட்டது. பார்வையில் காணும் அரசாணையில் தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 06.08.2018 முற்பகல் பணி வரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே பார்வையில் காணும் அரசாணையின் அடிப்படையில் தனியருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் 06.08.2018 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது. மேலும் தனியருக்கு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் பெற விதிகளின்படி தகுதியுடையவர் ஆகிறார்.

மேற்படி விவரம் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
திருவள்ளூர்.

பெறுநர்
திருமதி.S.மரியபிரீத்தி,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ,
திருவள்ளூர்.
(சார்ந்த அலுவலர் மூலமாக)

நகல்:
1. திட்ட இயக்குநர்/இணை இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவள்ளூர்.
2. பஆ2 பிரிவு.

D:\back up\EPA3\9221-2018-pa3.doc

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருவள்ளூர் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான திருமதி.N.J.மேரிஜோஸ்பின் என்பவர் திருமணமான மகள் திருமதி.S.மரியபிரீத்தி என்பவரை திருவள்ளூர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 கீழ் தொடர்புள்ள சட்டப் பிரிவுகளை தளர்த்தி பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை

அரசாணை (4ப) எண்.02

நாள்:13.01.2021
சார்வரி, மார்கழி, 29,
திருவள்ளுவர் ஆண்டு – 2051

படிக்கப்பட்டவை:

1. திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை எண்.9221/2018/பஅ3, நாள்:26.07.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கடிதம் எண்.63195/2019/டி1, நாள்:05.02.2020.

*****

ஆணை:

திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 17.12.2017 அன்று பணியிடைக் காலமான திருமதி.N.J.மேரிஜோஸ்பின் என்பவரின் வாரிசுதாரராகிய திருமணமான மகள் திருமதி.S.மரியபிரீத்தி என்பவருக்கு திருவள்ளூர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராக திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 06.08.2018 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். எனவே, தனியரின் பணியினை வரன்முறை செய்யக்கோரி மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இந்நேர்வில் அரசுப் பணியாளர் திருமதி.N.J.மேரிஜோஸ்பின் பணியிலிருக்கும் போது இறந்த நாள் 17.12.2017. அவரது வாரிசுதாரரான அவரது மகள் திருமதி.S.மரியபிரீத்தி என்பவர் தனக்கு பணி நியமனம் கோரி விண்ணப்பித்த நாள் 08.03.2018. விண்ணப்பதாரரின் பிறந்த தேதி 12.09.1992. அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 25. பணி நியமன நாளில் தனியரின் வயது 25. தனியர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். தனியருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை. இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது. அவருடைய குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை.

2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள்01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் (சத்துணவு) பணிபுரிந்து 17.12.2017 அன்று காலமான திருமதி.N.J.மேரிஜோஸ்பின் என்பவரின் வாரிசுதாரராகிய கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமணமான மகள் திருமதி.S.மரியபிரீத்தி என்பவரின் பணியினை 06.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58–ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றைத் தனியர் பொருட்டு தளர்வு செய்தும், திருமதி.S.மரியபிரீத்தி என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் 06.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 05.01.2021 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண்.50/ட்டி.1/2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.320/ஜி1/2021, நாள்:08.01.2021–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹன்ஸ் ராஜ் வர்மா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.

**நகல்:**
திருமதி.S.மரியபிரீத்தி, இளநிலை உதவியாளர்,
திருவள்ளூர் மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**